

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (17.11.2025) தலைமைச் செயலகத்தில், அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் சந்தித்து, தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் 2024–2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 22 கோடியே 8 லட்சம் ரூபாயில், இடைக்கால பங்கு ஈவுத் தொகையான 10 கோடி ரூபாய் 28.03.2025 அன்று செலுத்தப்பட்ட நிலையில், தற்போது மீதமுள்ள பங்கு ஈவுத் தொகையான 12 கோடியே 8 லட்சத்து 87 ஆயிரத்து 687 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (17.11.2025) தலைமைச் செயலகத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த்தின், மனைவி திருமதி ருச்சி பிரிதம் சந்தித்து, கம்போடியாவின் கலாச்சாரத்தில் இந்தியப் பேரரசுகளின் பெரும் பங்கு குறித்து தான் எழுதிய "CAMBODIA" நூலினை வழங்கினார். இந்நூலில், கம்போடியாவில் பல்லவர்கள், சோழர்கள், கட்டடக்கலையின் சிறப்புகள் குறித்து விளக்கப்பட்டுள்ளது.

### தமிழ் நாடக உலகிலும்

# திரைத்துறையிலும் பெரும்பங்காற்றியவர் கலைமாமணி எஸ்.எஸ்.சிவசூரியன்!

## நூற்றாண்டு தொடக்கத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, நவ. 18 -**

**"தமிழ்நாடக உலகிலும் திரைத்துறையிலும் பெரும் பங்காற்றியவர் கலைமாமணி எஸ்.எஸ்.சிவசூரியன் அவர்கள்" என்று அவரது நூற்றாண்டு தொடக்கத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:

கலைமாமணி எஸ்.எஸ். சிவ சூரியன் அவர்களின் தொடக்கத்துக்கும், அதன் ஒரு பகுதியாக நடைபெறும் இந்தக் கலைக்கூடத் திறப்பு விழாவுக்கும் முதற்கண் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாடக உலகிலும் திரைத்துறை யிலும் பெரும் பங்களிப்பினை ஆற்றியவர் கலைமாமணி சிவ சூரியன் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்களின் திரைக்கதை யில் உருவாகி, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களை நடிகராக நிலைநிறுத்திய புரட்சிக் காவியமான 'மந்திரிகுமாரி', நடிகர் திலகம் சிவாஜி அவர்களின் 'தூக்கு தூக்கி', 'முதலாளி', 'இதயக் கனி', 'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்', 'நேற்று இன்று நாளை', 'ஊர்க் காவலன்' எனச் சுமார் 100 திரைப் படங்களில் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியவர்தான் சிவசூரி யன் அவர்கள். நாடகத்துறையில் பலருக்கு ஊக்கமாக இருந்தவர். இவற்றுக்கான அங்கீகார மாகத்தான் கலைமாமணி விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.

பூச்சி முருகன் அவர்களும், தம் தந்தை வகுத்த பாதையைப் பின்பற்றி, பதினைந்து வயதிலேயே நாடகத்துறையில் பயணத்தைத் தொடங்கி, பின்னர் சினிமா, தொலைக்காட்சி மற்றும் பொது வாழ்க்கை எனப், பல்வேறு தளங்களிலும் செயல்பட்டு வருவதை நாம் அறிவோம். அதற்கான பாராட்டாகத்தான் அண்மையில் அவருக்கு, என் கையால் கலைமாமணி விருதினை வழங்கினேன். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணை த்தலை வர், தி. மு.கழகத்தின் தலைமைக் கழக அலுவலகச் செயலாளர் எனத் தந்தைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அவர் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

இத்தகைய புகழுடைய மரபினை உடைய பூச்சி முருகன் அவர்களின் மகன் திரு. சிவசூரியன் முருகன் சட்டம் பயின்று வழக்கறிஞராகச் சிறந்தாலும், தமது தாத்தா மற்றும் தந்தையின் கலைத்துறைப் பங்களிப்பையும் மறக்காமல் இந்த நூற்றாண்டு விழாவினை ஒருங்கிணைத்துள்ளதோடு, அதனை முன்னெடுத்துச் செல்லும் வகையில், தாத்தாவின் பெயரில் இந்தக் கலைக்கூடத்தையும் தொடங்குவதை அறிந்து நான் பெரிதும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். பெயரில் தாத்தாவையும் தந்தையையும் கொண்டிருப்பது மட்டுமல்ல; செயலிலும் அவர் அவ்வாறே திகழ்வார் என்பதற்கான அடையாளமாக இதனைக் கருதுகிறேன்.

நாடகத்துறையின் வளர்ச்சி என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், கலைஞர்களுக்கான ஆதரவு என்ற நோக்கத்தோடும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்தக் கலைக்கூடம், கலைமாமணி எஸ்.எஸ். சிவசூரியன் அவர்களின் பங்களிப்பினையும் புகழினையும் அடுத்த பல தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லட்டும், நூற்றாண்டு சிறக்கட்டும் என வாழ்த்துகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### முதல்வர் தலைமையில் வலிமையான கூட்டணி இருப்பதால்

# பீகாரைப் போன்று தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். எடுபடாது!

## சிவகங்கையில் கு.செல்வப்பெருந்தகை பேட்டி!

சிவகங்கை, நவ. 18 -

சிவகங்கையில் மாநில இளைஞர்காங்கிரஸ் நிர்வாகிகளுக்கான பயிற்சி முகாம் கடந்த 14ஆம் தேதி 16ஆம் தேதி வரை மூன்று தினங்கள் நடைபெற்றது .இதில் மாநிலம் முழுவதிலுமிருந்து இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இந்த பயிற்சி முகாமில் விழாவில் மாநில காங்கிரஸ் கமிட்டி தலவர் செல்வபெருந்தகை கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

இந்த பயிற்சி முகாமில் முன்னாள் காங்கிரஸ் தலைவர் கே.வி.தங்கபாலு, எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. மாநில காங்கிரஸ் கட்சி பொதுச்செயலாளர் பச்சேரி சி.ஆர்.சுந்தர்ராஜன், அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் தலைவர் அனிதா பானு மற்றும் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் சஞ்சய் காந்தி இளைஞர் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் .



பின்னர் செல்வப் பெருந்தகை செய்தியாளர்களிடம் கூறியதாவது. மாநில இளைஞர் காங்கிரஸ் பயிற்சி முகாம் மூன்று நாட்கள் நடைபெற்றது .

இதில் காங்கிரஸ் கட்சியின் எதிர்கால திட்டங்கள் ,எஸ்.ஐ.ஆர். 2026சட்ட மன்ற தேர்தலில் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து பயிற்சி அளிக்கப் பட்டது. பீகாரில் இந்தியா கூட்டணி தோல்வி என்பது ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட தோல்வி ஆகும் .

இது தனிப்பட்ட முறையில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி கிடையாது.

140 ஆண்டுகள் பாரம்பரியுள்ள காங்கிரஸ் கட்சியினால் இந்தியாவில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இதை புரிந்து கொள்ளாத சிலர் காங்கிரஸ் கட்சியை கலைத்து விடலாம் என்று கூறுகிறார்கள். வெற்றி தோல்வி என்பது அரசியலில் சகஜம்தான். அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி பீகார் தேர்தல் தோல்வியை காரணம் காட்டி காங்கிரஸ் கட்சியை கலைத்து விடு மாறு கூறியுள்ளார்.

இதே அவரது கட்சியை சேர்ந்த ஜெயலலிதா இரண்டு முறை தோல்வி அடைந்துள்ளார். தற்பொழுது எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க.தொடர்ந்து தோல்வியை சந்தித்து வருகிறது .இதற்காக கட்சியை கலைத்துவிடுமாறு நாங்கள் கூறவில்லை . முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி என்ன பேசுகிறோம் என்று தெரிந்து பேசவில்லை. எப்பொழுதுமே அவர் சரியாக பேசமாட்டார்.

பீகாரை போல் தமிழகத்தில் எஸ். ஐ .ஆர். முறைஎடுபடாது. அதற்கு காரணம் இந்தியா கூட்டணி தலைவர் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் வலிமையான கூட்டணியாக அமைந்துள்ளது. இந்தியா கூட்டணியினர் தீவிரமாக எஸ்.ஐ .ஆர். ஐ கண்காணித்து வருகிறார்கள். எப்பொழுதுமே காங்கிரஸ் கட்சி ஆட்சியில் பங்கு கேட்டதில்லை. காங்கிரஸ் அகில இந்திய தலைமை என்ன சொல்கிறதோ அதன்படி தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி நடக்கும்.

இந்த கூட்டணி ஒரு வலுவான கூட்டணியாகவும் நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் நிச்சயம் வெற்றி பெறும். முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி தொடரும்.

இவ்வாறு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகை கூறினார்.

### பழம்பெரும் நடிகரும் திராவிடச் சிந்தனையாளருமான

# கலைமாமணி எஸ்.எஸ்.சிவசூரியன் நூற்றாண்டு தொடக்க விழா!

## ஆர்.எஸ்.பாரதி – டி.கே.எஸ்.இளங்கோவன் – நடிகர் நாசர் – அன்பகம் கலை – பூச்சி எஸ்.முருகன் பங்கேற்பு!

சென்னை, நவ. 18 -

தமிழ் சினிமாவின் பழம்பெரும் நடிகரும் திராவிடசிந்தனையாளருமான, கலைமாமணி எஸ். எஸ். சிவசூரியன் கலைக்கூடம் மற்றும் கலைமாமணி எஸ். எஸ்.சிவசூரியன் நூற்றாண்டு தொடக்க விழா 14.11.2025 அன்று மாலை சென்னை, தி.நகர், வாணி மஹாலில் நடைபெற்றது.

இதில் தி.மு.க. அமைப்புச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர். எஸ். பாரதி, செய்தித் தொடர்பு அணித் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.கே. எஸ். இளங்கோவன், தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நாசர், நடிகரும், ஒளிப்பதிவாளருமான இளவரசு, எழுத்தாளரும் கதை சொல்லியுமான பவா செல்லதுரை, நூற்றாண்டு விழா கொண்டாடும் கலைமாமணி எஸ். எஸ்.சிவசூரியன் அவர்களின் மகனும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர்,

தி.மு.க. தலைமை நிலைய செயலாளர், தென்னிந்திய நடிகர் சங்கத் துணைத் தலைவருமான கலைமாமணி பூச்சி எஸ். முருகன் ஆகியோர் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினர்.

திமுக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், தாயகம் கவி, சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தலைமை நிலைய செயலாளர் துறைமுகம் காஜா, முன்னாள் ஐஜி சந்திரசேகர் மற்றும் தென்னிந்திய நடிகர் சங்க பொதுசெயலாளர் விஷால், பொருளாளர் கார்த்தி, துணைத் தலைவர் கருணாஸ், நடிகர் சங்க அறக்கட்டளைக் குழு உறுப்பினரும் மூத்த நடிகையுமான சச்சு, லதா

நடிகர்கள் எஸ்.எஸ். ராஜேந்திர குமார், ஆனந்த் பாபு, பொன்வண்ணன், போஸ் வெங்கட், 'ரீமன், பெப்சி விஜயன், லலிதா குமாரி, குட்டி பத்மினி, தாசரதி உள்பட திரளான அரசியல், திரை பிரப லங்கள் கலந்துகொண்டு கலைமாமணி எஸ். எஸ்.சிவசூரியன் திருவுருவப் படத்துக்கு மரியாதை செய்தனர்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக செனட் உறுப்பினரும் வழக்கறிஞருமான மீனாட்சி முருகன் வரவேற்புரை ஆற்ற, நிகழ்ச்சியை வழக்கறிஞர் அருணா அசோக் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கலைமாமணி எஸ்.எஸ்.சிவசூரியன் பேரனும் வழக்கறிஞருமான சிவசூரியன் முருகன் செய்திருந்தார்.

எஸ்.எஸ்.சிவசூரியன் கலைக்கூடம் நாடகக் கலைக்கும் நாடகக் கலைஞர்களுக்கும் தேவையான களம் அமைக்கவும் நாடகங்கள் தயாரிப்பு மற்றும் அழிந்துவரும் கலைகளை மீட்டெடுத்து வளர்க்கும் பணிகளிலும் ஈடுபட இருக்கிறது. அதன் தொடக்கமாக திரை நாடகக் கலைஞர் ஆனந்த குமார் என்பவரின் கலைஞன் என்னும் தனி நபர் நாடகம் நிகழ்த்தப்பட்டது.

மேலும், கலைக்கூடம் சார்பாக, 5 கலைஞர்களுக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது.

### வாக்காளர் பட்டியல் சிறப்பு சீராய்வை

# மக்கள் பக்கம் நின்று எதிர்கொள்வோம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. உறுதி!

சென்னை, நவ. 18 -

"வாக்காளர் பட்டியல் சிறப்பு சீராய்வை மக்கள் பக்கம் நின்று எதிர் கொள்வோம்" என்று கழக சட்டத்துறைச் செயலாளர் என். ஆர். இளங்கோ எம்.பி. கூறியுள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

தலைவர், முதல மைச்சர் ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு சீராய்வு குறித்து தி.மு.க. சட்டத்துறை பயிற்சி முகாம் நடைபெற்றது!



நூற்றுக்கணக்கான தி.மு.க. சட்டத்துறையினருக்கும், தி.மு.க. இளைஞர் அணியினருக்கும் மற்றும் தகவல் மற்றும் தொழில்நுட்ப அணியினருக்கும் SIR ஐ எதிர் கொள்ள பயிற்சி அளிக்கப்பட்டது. வாக்காளர் பட்டியல் சிறப்பு சீராய்வை மக்கள் பக்கம் நின்று எதிர்கொள்வோம்!

இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. கூறியுள்ளார்.

### தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர்

# தொழில் முனைவு திட்டத்தில் 4687 பேர் பயனடைந்துள்ளனர்!

## தமிழ்நாடு அரசு தகவல்!

சென்னை, நவ. 18 -

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான CM ARISE தொழில் முனைவு திட்டத்தின் கீழ் இதுவரை 4ஆயிரத்து 687 பேர் பயனடைந்துள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு மக்களின் மேம்பாட்டிற்காக பல சமூக நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.குறிப்பாக பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களுக்கு பயனுள்ள திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான தொழில் முனைவுத் திட்டமான

CM ARISE திட்டம் கடந்த 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபாய் வரை 35 சதவீதம் மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதோடு பொருளாதார அதிகாரமளிக்கும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், CM ARISE தொழில் முனைவு திட்டம் மூலம் இது வரை 4ஆயிரத்து 687 பேர் பயனடைந்துள்ளதாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தெரிவித்துள்ளது.



பழம்பெரும் நடிகரும் திராவிடச் சிந்தனையாளருமான கலைமாமணி எஸ்.எஸ்.சிவசூரியன் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, நடிகர் சங்கத் தலைவர் நாசர், வீட்டு வசதி வாரியத் தலைவரும் எஸ்.எஸ்.சிவசூரியன் அவர்களின் புதல்வருமான பூச்சி எஸ்.முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சி.வெ.கணேசன் ஆகியோர் 72–ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு கடலூர், நகர அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மேயர் சுந்தரிராஜா, துணைமேயர் பா.தாமரைச்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.